பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

19 08 2024 **MONDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- பொதுத்துறை வங்கிகளின் செயல்பாடு குறித்த ஆய்வுக்கூட்டம் புதுதில்லியில் தற்போது மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்று வருகிறது.
- மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தலைமையில் தென் மண்டல உயரதிகாரிகளின் ஆய்வுக்கூட்டம் இன்று சென்னையில் நடைபெறுகிறது.
- முன்னாள் ராணுவ தளபதி ஜெனரல் சுந்தர்ராஜன் பத்மநாபன் இன்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது 83
- தமிழகத்தில் இளநிலை மருத்துவப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான தரவரிசைப்பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.
- இருபது வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று பூட்டானை எதிர்கொள்கிறது.

---- *இனி விரிவான செய்திகள்* ----

<<<<<>>>>>

சகோதரத்துவத்தைப் போற்றும் ரக்ஷாபந்தன் பண்டிகை இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், சகோதரர்கள் - சகோதரிகள் இடையே இருக்கும் அன்பு மற்றும் பரஸ்பர நம்பிக்கையையும், பிணைப்பையும், மரியாதையையும் இந்த பண்டிகை வெளிப்படுத்துவதாக தெரிவித்துள்ளார்.

இந்த நன்நாளில் நாட்டில் உள்ள பெண்களின் பாதுகாப்பு மற்றும் மரியாதையை உறுதிப்படுத்துவதற்கான உறுதிமொழியை அனைவரும் ஏற்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், இந்த பண்டிகை அனைவருக்கும் மகிழ்ச்சியையும், செழிப்பையும் வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

பொதுத்துறை வங்கிகளின் செயல்பாடு குறித்த ஆய்வுக்கூட்டம் புதுதில்லியில் தற்போது மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற்று வருகிறது.

நிதிச்சேவைகள் துறை செயலாளர் டாக்டர் விவேக் ஜோஷி மற்றும் பொதுத்துறை வங்கிகளின் நிர்வாக இயக்குனர்கள், தலைமை நிர்வாக அலுவலர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் இதில் பங்கேற்றுள்ளனர்.

சேமிப்பில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி, கடன் - சேமிப்பு விகிதம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

மேலும், பிரதமரின் வீட்டுவசதி திட்டம், சூரிய மின்சக்தி திட்டம் உள்ளிட்டவற்றில் பொதுத்துறை வங்கிகளின் செயல்பாடு குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது.

இதையடுத்து, இன்று மாலை நடைபெறும் கிராமப்புற வங்கிகளின் செயல்பாடு குறித்த ஆய்வுக்கூட்டத்தில் திருமதி நிர்மலா சீதாராமன் பங்கேற்கிறார்.

<<<<<>>>>>

வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், நேபாள வெளியுறவு அமைச்சர் திருமதி **Arzu Rana Deuba**-வை புதுதில்லியில் இன்று சந்தித்தார்.

இந்தியா – நேபாளம் இடையே வழக்கமாக நடைபெறும் உயர்நிலைக் குழு கூட்டத்தின் ஒரு பகுதியாக இந்த சந்திப்பு நடைபெறுகிறது.

<<<<<>>>>>

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் தென் மண்டல உயரதிகாரிகளின் ஆய்வுக்கூட்டம் இன்று சென்னையில் நடைபெறுகிறது.

மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில், தமிழகம், கர்நாடகா, ஆந்திரா, தெலங்கானா, கேரளாவை சேர்ந்த தகவல் ஒலிபரப்புத்துறையின் உயரதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

சென்னை அகில இந்திய வானொலி நிலையம் மற்றும் தூர்தர்ஷனில் இந்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்று வருகிறது.

மத்திய அரசின் செயல்பாடுகளை மக்களுக்கு கொண்டுசெல்லும் விதம் குறித்தும், எதிர்கால திட்டங்கள் குறித்தும் இந்த ஆய்வுக்கூட்டத்தில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படுகிறது.

**<<<<<>>>>>**

மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவின் பிறந்தநாளையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் உள்ள அன்னாரது திருவுருவப்பபடத்திற்கு அவர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

**<<<<<>>>>>**

ஜிம்பாப்பே துணை அதிபர் திரு **Constantino Chiwenga** இன்று புதுதில்லி வந்தடைந்தார்.

நாளை நடைபெறவுள்ள 19-ஆவது இந்திய – ஆப்பிரிக்க வர்த்தக மாநாட்டில் அவர் பங்கேற்கிறார்.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்த மாநாட்டில் அவரது பங்கேற்பு இந்தியா - ஜிம்பாப்வே இடையேயான உறவை மேலும் பலப்படுத்தும் என்று தெரிவித்துள்ளார்.

ஆப்பிரிக்கா உடனான உறவில் இந்தியாவின் உறுதிபாட்டை இந்த மாநாடு வெளிப்படுத்தும் என்றும் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால் கூறியுள்ளார்.

**<<<<<>>>>>**

தமிழகத்தில் இளநிலை மருத்துவப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான தரவரிசைப்பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

சென்னையில் இதனை வெளியிட்டு பேசிய மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா.சுப்பிரமணியன், இந்தாண்டு மருத்துவப்படிப்பில் கூடுதலாக 150 இடங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - மா. சு. – 40 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் தமிழக அரசு பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருவதாக மாநில சட்டத்துறை அமைச்சர் திரு ரகுபதி தெரிவித்துள்ளார்.

நாகப்பட்டினம் மாவட்டம் அக்கறைபேட்டையில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய அவர், அரசின் திட்டங்களை மீனவர்கள் பயன்படுத்தி பலன் பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

தமிழக அரசின் புதிய தலைமைச்செயலாளராக திரு என்.முருகானந்தம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் இன்று இப்பொறுப்பினை அவர் ஏற்றுக்கொண்டார்.

இந்த பொறுப்பினை வகித்துவந்த திரு சிவ்தாஷ் மீனா, தமிழ்நாடு ரியல் எஸ்டேட் ஒழுங்கு முறை ஆணையத்தின் தலைவராக நியமிக்கப்பட்ட நிலையில் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியராக பதவி வகித்து வந்த திரு ஜி. லஷ்மிபதி தமிழக முதலமைச்சரின் இணைச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மாநில பொது நூலகத்துறை இயக்குனராக இருந்த திரு இளம்பகவத் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

<<<<<>>>>>

முன்னாள் ராணுவ தளபதி ஜெனரல் சுந்தர்ராஜன் பத்மநாபன் இன்று சென்னையில் காலமானார். அவருக்கு வயது 83. இந்திய ராணுவ தளபதியாக அவர் இரண்டாயிரமாவது ஆண்டு செப்டம்பர் 30ஆம் தேதி பொறுப்பேற்றார்.

1940ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் தேதி கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் பிறந்த அவர், இந்திய ராணுவத்தின் பல முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.

டேராடூனில் உள்ள ராஷ்ட்ரிய இந்திய ராணுவ கல்லூரி மற்றும் புனேயில் உள்ள தேசிய பாதுகாப்பு அகாடமியில் அவர் கல்வி பயின்றார்.

1959ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் தேதி ராணுவத்தின் ஆயுதப் பிரிவில் தனது பணியை தொடங்கினார்.

ராணுவத்தின் ஆயுதப்பிரிவில் சிறப்பாக பணியாற்றிய அவர், 1975-76-ஆம் ஆண்டுகளில் அவர் இந்தியா மேற்கொண்ட போர் நடவடிக்கைகளுக்கு தலைமை வகித்து செயலாற்றினார்.

குறிப்பாக நாட்டிலேயே பழமையான மலையேற்ற பிரிவுக்கு அவர் தலைமை தாங்கி போர் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

துப்பாக்கிச்சூடும் பயிற்சி கல்லூரி, காலாட்படையின் ஆயுதப்பிரிவு, காஷ்மீரில் தீவிரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் பிரிவுகளின்தலைவராக அவர் ஆற்றிய சிறப்பான பணிக்கு அவருக்கு விஷிஷ்ட சேவை மற்றும் அதிவிஷிஷ்ட சேவை விருதுகள் வழங்கப்பட்டன.

இந்திய ராணுவத்தின் உளவுப்பிரிவுக்கு அவர் தலைமை இயக்குனராக பொறுப்பு வகித்தார் எனப்து குறிப்பிடத்தக்கது.

43 ஆண்டுகள் இந்திய ராணுவத்தில் சிறப்பாக பணியாற்றிய அவர், ராணுவத்தின் வடக்கு மற்றும் தெற்கு மண்டல பிரிவுகளுக்கு தலைமை வகித்தார்.

2002-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி பணியில் இருந்து ஓய்வுபெற்ற அவர், தமது ஓய்வு நேரத்தில் புத்தகங்களை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவைத் தேர்தலின் முதல்கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் நாளை தொடங்குகிறது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்ய இம்மாதம் 27-ஆம் தேதி கடைசி நாளாகும், அதற்கு அடுத்த நாள் வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

வேட்புமனுக்களை திரும்பப்பெற இம்மாதம் 30-ஆம் தேதி கடைசி நாளாகும்.

முதல்கட்டமாக 24 தொகுதிகளில் அடுத்த மாதம் 18-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது.

இதற்கிடையே, ஜம்மு காஷ்மீரில் நாளை இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**<<<<<>>>>>**

ஜம்மு காஷ்மீரின் எல்லைப்பகுதியையொட்டிய நெடுஞ்சாலைகளில் தீவிரவாத ஊடுருவலை தடுக்கும் வகையில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அங்குள்ள ஜம்மு - ஸ்ரீநகர் மற்றும் **Batote- Kishtwar** நெடுஞ்சாலைகளில் சமூக விரோத செயல்களை கண்காணித்து கட்டுப்படுத்தும் வகையில் ட்ரோன்கள், சிசிடிவி, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை பாதுகாப்புப்படையினர் பயன்படுத்துவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**Patnitop** பகுதியில் தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்புப்படையினருக்கும் இடையே நடைபெற்ற மோதலையடுத்து எல்லைப்பகுதி மாவட்டங்களில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவிக்கிறார்.

சந்தேகத்திற்கு இடமான பகுதிகளை காவல்துறையினர் மற்றும் பாதுகாப்புப்படையினர் தீவிரமாக கண்காணித்து வருவதாகவும், இரவு நேர ரோந்து பணி அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் ஜம்மு காஷ்மீர் காவல்துறை தெரிவித்துள்ளது.

**<<<<<>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

20 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று பூட்டானை எதிர்கொள்கிறது.

காட்மாண்டுவில் இப்போட்டி, பிற்பகல் மணி 2.45-க்கு தொடங்குகிறது.

நேற்று, நேபாளம் 1-0 என்ற கோல் கணக்கில், இலங்கையை வென்றது.

<<<<<>>>>>

மாலத்தீவில் நடைபெற்றுவரும் ஆசிய அலைசறுக்கு சாம்பியன் போட்டியில் இந்தியாவின் ஹரிஷ் முத்து மற்றும் ஸ்ரீகாந்த் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<>>>>>